உடலுக்கு உயிர் ஆன்மா இருப்பது போல், நமது ஆன்மாவிற்கு உயிர் தூய ஆவி.

- புனித பீட்டர் டெமியன்

குடும்பத்திற்குள் நிகழும் போது இதே மாதிரியான சூழ்நிலையை பல சமயங்களில் நாம் கடந்து வந்திருப்போம். அந்த இருண்ட காலத்தில் இதே மாதிரியான நம்பிக்கை ஒளி தெரியும் போது, நாம் கைவிடப்படவில்லை, கடவுள் தமது வாக்குறுதியை நிறைவேற்றுகிறார் என்ற தெம்பு ஏற்படும்.

கடவுள் கைவிடவில்லை, மகிழ்ச்சியடைந்த சீடர்கள் மத்தியில் கிறிஸ்து எவ்வாறு மீண்டும் தோன்றுகிறார் என்பதை நாம் பார்த்தோம். இது அவர்களது பணிக்கு வலிமை கொடுத்து. அவர்களின் பணியை (கிறிஸ்துவின் பணி) நிறைவேற்றுவதற்கு கொடைகளை அவர் வழங்கினார் அவர்கள் இருவரும் ஒரே பணியில் ஒருவரானார்கள். ஆவியால் புது தெம்படைந்த சீடர்கள் தங்களது பணியை மேற்கொள்ளும் உத்வேகமடைந்தனர். அது அவர்களை முன்னேறச் செய்து.

அவநம்பிக்கையில் உலகமே இருண்டு விட்ட சூழ்நிலையை நாம் எதிர்நோக்கும் போது நாமும் பதுங்குவோம், வெளியில் வர மாட்டோம். எதார்த்தத்தை அல்லது உண்மை நிலையை ஏற்க மறுப்போம், நமது வேதனையிலும் பாவத்திலும் உழலுவோம். மனநிம்மதியைத் தேடி அவ்வப்போது மது அருந்துவோம், நமது சூதாட்டப் பழக்கம் விடிவெள்ளியாக மாறிவடும். ஆனால், எண்ணற்ற நமது வேதனைகளை தோல்விகளை, கடவுளிடம் அர்ப்பணிப்போம், அவ்வேளையில் அவர் இல்லாவிட்டால் நாம் வழிதவறி விடுவோம். நமது விசுவாசம் தடம்புரண்டு விடும். கிறிஸ்துவனுக்கு வேதனையும் துக்கமும் கூடபிறந்தது. அதிலிருந்து தப்பிக்க முடியாது. வாழ்க்கை துணையாக வரும் கடவுளே நமக்கு அரண், துன்பங்களையும் துயரங்களையும் போக்குபவர். இந்த துன்பமும் சவால்மிக்க காலங்களும் எல்லாம் மற்றவர்களது, நமதல்ல என்ற எண்ணம் கூடாது.

தந்தையாகிய கடவுள் நமக்காக போராட வேண்டும் என நினைப்பது, நமது அறியாமை. போராடுவோம், அனைத்தையும் அவரிடம் அர்ப்பணித்து விட்டு. மாறாக நம்பிக்கையற்ற மக்களாக இருந்தால் நாம் பலவீனர்கள். எத்தனை முறை இயேசு உங்களை அழைத்திருக்கிறார்? நமது வேதனை, துயரம், தீய பழக்கத்திலிருந்து மீண்டும் எழ எத்தனை முறை தமது ஆவியை நம்மீது ஊதி இருப்பார். மனந்திரும்ப வேண்டிய காலம் இதுவே, மீண்டும் எழுவதற்கு உதவ அவருக்கு வழிவிடுவோம். கடவுள் ஒருவரே, ஆயினும் அவரும் நாமும் ஒன்றல்ல. ஆனால் நம்மை அன்பு செய்பவரும் அவர், நம்மை கைவிட மாட்டேன் என உறுதியளிக்கிறார். “உங்கள் கவலைகளையெல்லாம் அவரிடம் விட்டு விடுங்கள்; ஏனென்றால் அவர் உங்கள் மேல் கவலை கொண்டுள்ளார்”(1பேதுரு 5:7). இதுவே நமக்கும் நமது குடும்பத்திற்குமான பணி. அவரது சீடர்களாக எழுவோம், அவரது பணியை மேற்கொள்வோம், சமாதானம் நமக்கு அருளப்படும். ✝

### வாரம் ஒரு வசனம்

கடவுள் ஒருவரே, ஆயினும் அவரும் நாமும் ஒன்றல்ல.

INTERNAL CIRCULATION ONLY
BUL 20/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

20 மே 2018

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பெந்தக்கோஸ்து ஞாயிறு

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்



## கிறிஸ்துவில் இயங்கும் குடும்பம்...

# சுதந்திரமானது

**உங்களுக்கு அமைதி உண்டாகுக** - அச்சத்தில் ஒளிந்து கொண்டிருக்கும் சீடர்களுக்கு இயேசு கூறும் வார்த்தைகள். அது அவர்களுக்கு வாழ்வளிக்கும் வாயுவாக இருந்து. இருளில் நம்பிக்கையில்லாமல் இருந்த காலத்தில் நம்பிக்கை ஒளி படர்ந்தது. மீண்டும் அதே முதல் வாழ்த்துச் செய்தி கிடைத்தப்போது அது எல்லாமாக மாறியது, புத்துயிர் பிறந்தது. துயரச் சம்பவங்கள், குழப்பங்கள்

**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிரம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. அண்ட்ரூ கூய்

*2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
***எதிர் நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்.***
*2018 மே(வைகாசி) மாதத்தின் கருப்பொருள்:*
***கிறிஸ்துவில் வல்லமை கொண்ட குடும்பம்***
**மினவுதல் தேவாலயத்தின் 170 ஆம் ஆண்டை நோக்கிய பயணம்**
**(1848 - 2018)**

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்:: மே சனி 19 -05-2018 - ஞாயிறு 27 -05-2018 வரை**

**பெந்தகோஸ்தே பெருவிழா**
திரு.பணி: 2:1-11 திரு.பாடல்: 103: கலாத்தியர்: 5:16-25; யோவா;15:26-37,16,12-15
**“ஆண்டவரே, உம் ஆவியை அனுப்பி மண்ணகத்தின் முகத்தைப் புதுப்பிக்கின்றீர்”(தி.பா.103)**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 19 | 5.00 மாலை<br>5.30 மாலை<br>5.45 மாலை<br>6.00 மாலை | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்<br>திருப்பலி (ஆ) கிபுமுவ | மாலை 7.00 குழந்தைகளுக்கான திருமுழுக்கு |
| ஞாயிறு | 20 | 7.00 காலை<br>9.00 காலை<br>11.00 காலை<br>1.00 பகல் | திருப்பலி (தமிழ்) தூய ஆவிபணிக்குழு<br>திருப்பலி (ஆங்) பு.ஆர்தர்<br>திருப்பலி (சீனம்) மாலை 4.30தித்தி<br>திருப்பலி (தே மொ) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு (முகிபுவ)<br>காலை 9.00-10.30(த) காலை 11.00 - 12.30 (தேமொ) காலை 110.00-12.30 (ஆங்கிலம்)<br>காலை 9.00-10.30(சீனம்) |
| திங்கள் | 21 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவியின்அருங்கொடை செபம்(ஆ) மாலை 7.30 அனைவரும் வருக* |
| செவ் | 22 | 6.45 கா | திருப்பலி | |
| புதன் | 23 | 7.00 மா | *செபமாலை/நவநாள்/கொடியேற்றம்/திருப்பலி/ஒன்றுகூடல் (குடும்ப வாழ்வுப் பணிக்குழு)* | |
| வியா | 24 | 7.00 மா | *செபமாலை/நவநாள்/திருப்பலி/ஒன்றுகூடல்(பங்கு மனித வள மேம்பாட்டுப் பணிக்குழு)* | |
| வெள் | 25 | 7.00 மா | *செபமாலை/நவநாள்/திருப்பலி/ஒன்றுகூடல் ( சமூக அக்கறைப் பணிக்குழு)* | |

**மூவொரு இறைவன் பெருவிழா**
இ.ச: 4:32-34, 39-40; தி.பா 33:4-5,6,9,18-19,2022; உரோ:8:14-17; மத்: 28:16-20
**“ஆண்டவர் தம் உரிமைச் சொத்தாக தெரிந்தெடுத்த மக்கள் பேறுபெற்றோர்.” திபா 32**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 26 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை /நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(இளைஞர் குழு) | |
| ஞாயிறு | 27 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) தமிழ்அப்போஸ்தலப்பணி<br>திருப்பலி (ஆ) (பு.பெர்னெடின்)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ)<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30; (சீனம் ) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

**2018 மே (வைகாசி) மாத செய்திகள்/நிகழ்வுகள்**
i) ஆலய காணிக்கை
அ) 12/13 மே 2018 ரிம: 10,794.15
ஆ) ஆண்டவரின் விண்ணேற்றம்(10/5/18) ரிம:2,874.40
தித்தி: ரிம: 120.00
*இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!*
ii)இன்றோடு நிறைவடையும் தூதுப்பணிக்கான காணிக்கைக்கு தாராள உள்ளத்தோடு அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
**iii) ஆலயத்திலுனுள் அமைதியைக் கடைப்பிடிப்போம்:** திருப்பலிகளுக்கு இடையில் வாசகங்கள் வாசிக்கும் ஒத்திகை அனுமதிக்கப்படாது.
திருப்பலிகளுக்கு மரியாதையான உடையணிந்து வருமாறு கேட்டுக்கொள்கிறோம்

மே 20 - புதிதாக திருமுழுக்குப் பெற்றவர்களை( கிபுமுவ) தூதுப்பணிக்கு அனுப்பப்படுதல் (மிஸ்டகோஜியா) புதிதாக திருமுழுக்குப் பெற்ற சகோதர சகோதரிகளுக்கு நம்முடைய வாழ்த்துகள்

*திருப்பலியை வழிநடத்திய தமிழ் அப்போஸ்தலப்பணிக்குழுவினருக்கும் திருவழிபாட்டுக் குழுவினருக்கும் நம்முடைய நன்றிகள்*

- **பெந்தகோஸ்தே திருவிழிப்பு 2018**
  **“தூய ஆவியானவரே, எனக்கு ஆற்றல் அளித்தருளும்”**
  மே 19 (சனி) இரவு 8.00 - 12.00 நள்ளிரவு வரை
  ஆங்கிலம்/தேமொழி = ஆலயத்தில்
  சீனம் - விவிலிய அறையில்
  தமிழ் - தேவாலய மண்டபத்தில்
  பெந்தகோஸ்தே திருப்பலிகளில் கடைசியானோர் / தொலைந்துபோனோர் / எளியோர் / சிறியோர் இவர்களுக்கு நற்செய்தியைக் கொண்டு செல்லும் பணிக்காக அனுப்பப்படுதல் இவர்களுக்காக நாம் செபிப்போம்.
  **நம்முடைய அன்பான நன்றி**களை இரட்சகர் சபைக் குருக்களான அருட்பணி. ஜோன் போல், அருட்பணி. ஜோசப் அப்ரகாம் அருட்பணி யூஜின் லீ மற்றும் அருட்பணி பேட் ரிக் மாசாங் இவர்களுக்கு தெரிவித்துக்கொள்வோம். இயேசுவோடும் அன்னை மரியாளோடும் நெருங்கி வர உறுதுணையாக இருந்த இவர்களுக்கு நமது நன்றிகள்.
- **பங்கு மக்களுக்கு ஓர் அழைப்பு:** நம் ஆலயத்தில், மாதா செபியில் உங்களுக்கு ஏற்பட்ட அற்புத அடையாளங்களை தெரிவிக்க அழைக்கிறோம். பங்கு அலுவலகம் அல்லது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.
- **இளைஞர்கள் விழா:** ஞாயிறு 27/05/2018 மாலை 5.00 மணிக்கு இளைஞர்கள் அனைவரையும் வரவேற்கிறோம். உங்களுடைய நண்பர்களையும் உடன் அழைத்து வரவும்.
- **குழந்தை இயேசு சபை அருட்சகோதரி கெட்ரூட் தான்** அவர்கள் துறவற அழைப்பின் 50 ஆண்டுகளை நிறைவுசெய்துள்ளார். அவருக்காக செபிப்போம்.

**மினவுதல் மாதா தேவாலயத்தின் 170 ஆம் ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம்**

**“ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றது”(லூக்கா1:45)**

23/05 (புதன்):மாலை 7.00 மணி - செபமாலை/நவநாள். கொடியேற்றம் தொடர்ந்து திருப்பலி **(குடும்ப வாழ்வுப்பணிக் குழு)** உணவு உபசரிப்பு: சோன் 1,2,3 &4)

24/05(வியாழன்):மாலை 7.00 மணி - செபமாலை, நவநாள் & திருப்பலி **( பங்கு மனித வள மேம்பாட்டுப் பணிக்குழு )**உணவு உபசரிப்பு ( சோன் 5,6,& 7)

25/05(வெள்ளி):மாலை 7.00 மணி - செபமாலை, நவநாள் & திருப்பலி **( சமூக அக்கறைப் பணிக்குழு)** உணவு உபசரிப்பு ( சோன் 8,9 & 10)

26/05(சனி):காலை 10.00 மணி -செபமாலை, நவநாள் & திருப்பலி & நோயாளிகளுக்கான விசேச ஆசீர் **(மினவுதல் தேவாலய மூத்த குடிமக்கள் பணிக்குழு)**

* மாலை 7.00 மணி மாலை திருப்பலி & மெழுகுத் திரி ஏந்தி அன்னை மரியாளின் பவனி - **(இளைஞர் பணிக்குழு)** உணவு உபசரிப்பு: சோன் 16

**27/05(ஞாயிறு):காலை 7.00 மணி (த) காலை 9.00 மணி (ஆ) காலை 11.00 மணி (சீனம்) பகல் 1.00 மணி (தேமொ)(அதிச க்கள் பங்கேற்பு)**
*** மாலை 5.00 மணி: இளைஞர் விழா**

2805(திங்கள்):மாலை 7.00 மணி -செபமாலை, நவநாள் & திருப்பலி **( பங்கு ஒற்றுமை பணிக்குழு)** உணவு உபசரிப்பு ( சோன் 14 & 15)

29/05(செவ்):மாலை 7.00 மணி -செபமாலை, நவநாள் & திருப்பலி **( சமயங்களுக்கிடையிலான உரையாடல் பணிக்குழு)** (உணவு உபசரிப்பு சோன் 11,12 &13)

30/05(புதன்):மாலை 7.00 மணி -செபமாலை, நவநாள் & திருப்பலி **( பங்கு உருவாக்கப் பணிக்குழு)** உணவு உபசரிப்பு ( சோன் 18, 19, 20 & 21)

31/05(வியாழன்):மாலை 7.00 மணி -செபமாலை, நவநாள் & திருப்பலி **( திருவழிபாட்டு பணிக்குழு & குடியேற்றவாசிகள் பணிக்குழு)**

- **170 ஆம் ஆண்டு நிறைவு விழா புத்தகத்தின் அறிமுக வெளியீடு** - 20 மே காலை10.00 மணி (ஆங்கில திருப்பலிக்குப்பின் நடைபெறும்)
- **அன்னை மரியாளின் கண்காட்சி:** மே 23 - 31 வரை மினவுதல் தேவாலய பார்லரில் கண்காட்சி நடைபெறும்.
- **மினவுதல் தேவாலய வரலாற்று நடை:** 170 ஆம் ஆண்டு காலப் பயணத்தை ஒட்டி ஒரு கண்காட்சி - விவிலிய அறையில் நடைபெறும்.மே 26 2018(சனிக்கிழமை)
- **170 ஆம் ஆண்டு நிறைவுக்காக - “காபி மேசை ” நினைவுப்புத்தகம் மற்றும் வரலாற்று ஒளிவட்டு** ஆகிய தயாரிப்பில் ஈடுபடும் குழுவினர்அனைவரையும் நம் செபங்களில் ஒப்புக்கொடுப்போம் இந்தப் புத்தகத்திற்காக முன்பதிவு செய்து கொள்ளலாம். தொடர்புக்கு: ஜெரோம் 019-790 8071 மற்றும் பங்கு அலுவலகத்தை நாடவும்
- **திருவிழா செலவுகளுக்காக உங்களுடைய நன்கொடைய எதிர்பார்க்கிறோம்.**
- **மே 26 ஆம் தேதி அன்னையின் தேர்ப்பவனி**யின்போது பயன்படுத்த மெழுகுத்திரிகளை உடன் கொண்டுவருமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- நவநாட்கள் நடைபெறும் நாட்களில் விருந்து உபசரிப்பின் போது உங்கள் திறமைகளை வெளிப்படுத்த (பாடல்/ஆடல்) ஆர்வமிருந்தால் தொடர்புக்கு ஜெரோம் (019-790 8071)
- **மினவுதல் தேவாலய மிதிவண்டி ஓட்டம்:** சனி 26.05.2018 காலை 6.30 மணிக்கு மிதிவண்டி ஓட்டம் நடைபெறும். நுழைவுக் கட்டணம் இல்லை. அனைத்து வயதினரும் பங்கேற்கலாம்.
  தொடர்புக்கு ஸ்பென்சர் (012- 3256718) டெர்ரி (012-636 6198)